# விமான நிலையம் – கிளாம்பாக்கம் மெட்ரோ ரயில் நீட்டிக்க முடிவு

சென்னை, ஜன. 7–

சென்னை விமான நிலையத்திலிருந்து, புதிய புறநகர் பஸ் நிலையம் அமைய உள்ள, கிளாம்பாக்கம் வரையிலான, 15.3 கி.மீ., துாரத்திற்கு, மெட்ரோ ரயில் வழித்தடத்தை நீட்டிக்க, அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக, சட்டசபையில், கவர்னர் பேசியதாவது:

சென்னையில், 45 கி.மீ., நீளத்திற்கான, முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டம், முழுமையாக முடிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

திருவொற்றியூர், விம்கோ நகர் வரையிலான நீட்டிப்பு பணிகள், இந்தாண்டு மத்தியில் நிறைவடையும்.

மேலும், 69 ஆயிரத்து, 180 கோடி ரூபாய் செலவில், 118.9 கி.மீ., நீளத்திற்கு, மூன்று வழித்தடங்களை அமைக்கும், இரண்டாம் கட்ட திட்டப் பணிகளை செயல்படுத்த, அரசு ஒப்புதல் அளித்து உள்ளது.



## நிதியுதவி

இப்பணியில், 52.01 கி.மீ., நீளத்திற்கு, நிதியுதவி அளித்திட, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஒப்புதல் அளித்து, முதல் தவணைக்கான, கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இரண்டாம் கட்டத்தின் மீதமுள்ள வழித்தடங்களுக்காக, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய வளர்ச்சி வங்கி ஆகிய பன்னாட்டு நிதியுதவி பெற, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டத்தில், 50 சதவீத பங்கு மூலதனத் தொகையை, மத்திய அரசு வழங்கியது போல, இரண்டாம் கட்ட திட்டத்திலும், 50 சதவீத பங்களிப்பிற்கான ஒப்புதலை, மத்திய அரசு விரைவாக வழங்க வேண்டும்.

சென்னை விமான நிலையத்தில் இருந்து, புதிய புறநகர் பஸ் நிலையம் அமைய உள்ள, கிளாம்பாக்கம் வரையிலான, 15.3 கி.மீ., துாரத்திற்கு, மெட்ரோ ரயில் வழித்தடத்தை நீட்டிக்க, அரசு முடிவு செய்துள்ளது.

தாம்பரம் – வேளச்சேரி வழித்தடத்தில் ஏற்படும், அதிகமான போக்குவரத்து நெரிசலை சமாளிக்க, 15.5 கி.மீ., நீளத்திற்கு, ரயில் போக்குவரத்து முறை ஒன்றை, அரசு அமைக்கும்.

இதற்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கையை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தயாரிக்கும்.

## ஒத்துழைப்பு

மேலும், 'சென்னை மாநகரக் கூட்டாண்மை' என்ற தனித்தன்மை வாய்ந்த, வளர்ச்சி திட்டத்தை, உலக வங்கி ஒத்துழைப்புடன் செயல்படுத்த, தமிழக அரசு உத்தேசித்துள்ளது.

அதிகாரம் பெற்ற, சென்னை பெருநகர ஒருங்கிணைக்கப்பட்ட பன்முக போக்குவரத்து ஆணையம் வழியே, சென்னை நகரின் போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைத்து, மக்களுக்கு தடையற்ற போக்குவரத்து வழக்குவதை, முக்கிய இலக்காக, இந்த திட்டம் வைத்துள்ளது.

இவ்வாறு, அவர் தெரிவித்தார்.